**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்

**2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம் நாள் சனிக்கிழமை**
**அசல் வழக்கு எண் – 98/2009**
**CNR No:TNAL050000372019**

சதாசிவம் , வயது 55, த/பெ.ஆதிமூலம், தெற்கு தெரு,
இடையக்குறிச்சி கிராமம், உடையார்பாளையம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம். – வாதி

/எதிர்/

1. வேலாயுதம், வயது 70, த/பெ.அப்பாசாமி,
2. கலா, வயது 45, க/பெ.(லேட்) ராமசாமி,
3. ராஜசேகர், வயது 23, த/பெ.(லேட்) ராமசாமி,
4. ராஜேஸ்வரி, வயது 20, க/பெ.(லேட்) ராமசாமி,
5. கோகிலம், வயது 20, க/பெ.வேலாயுதம்,
6. பாலசுப்ரமணியன், த/பெ.பவேலாயுதம்,
7. சித்ரா க/பெ.முருகன் (அனைவரும்) தெற்கு தெரு,
இடையக்குறிச்சி கிராமம், உடையார்பாளையம் தாலுக்கா,
அரியலூர் மாவட்டம். – பிரதிவாதிகள்

| | |
|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | : 06.04.2009 |
| வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : 06.04.2009 |
| வியாஜ்ஜிய மூலம் | : 03.04.2009 |
| வழக்கின் மொத்த பொறுமானம் | : Rs.1000/- |
| செலுத்தவேண்டிய நீதிமன்ற கட்டணம் | : Rs.75,50/- |
| செலுத்திய நீதிமன்ற கட்டணம் | : Rs.76/- |
| நீதிமன்ற கட்டணத்திற்கான சட்டப்பிரிவு | : 25(d) of TNCF Act |

தாவா சொத்தில் வாதிக்குரிய பொதுபாதை பாத்தியத்தை விளம்புகை செய்தும், அதன் தொடர்பரிகாரமாக வாதி தனது வீடு மற்றும் தோட்டத்திற்கு நடந்து செல்லவும், தாவா சொத்திலிருந்து வாதியின் மேல்கூரையை பழுது பார்க்கவும், ஓடு மாற்றவும், தாவா சொத்தினுள் வாதி புழங்கி வருவதையும் பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, அல்லது ஏஜண்டுகளோ எவ்வித்திலும் இடைஞ்சல் செய்யாமலிக்க வேண்டி நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத் தொகை

வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கவும், இன்னும் கோர்ட்டார் அவர்களுக்கு தம்யுக்தமாக தோன்றும் இதர நியாய பரிகாரங்கள் வழங்கியும் தீர்ப்பு செய்ய வேண்டுமாய் வாதி தரப்பில் பிரார்த்திக்கப்படுகிறது.

இவ்வழக்கானது 13.10.2023–அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்ததில், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சண்முகநாதன் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு கோப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**தீர்ப்பாணை**

1) வாதி அழைத்தும் ஆஜரில்லை. வாதியின் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

2) நீண்டகாலமாக விசாரணை பட்டியல் நிலுவையிலிருந்து வருகிறது.

3) இந்நிலையில் வாதியின் வருகை அவசியமாகிறது மற்றும் இவ்வழக்கு நீண்ட நாட்கள் நிலுவையில் இருக்கும் வழக்குகளின் கீழ் வருகிறது.

4) வாதி தனது தரப்பு விசாரணையை தொடங்க முன்வரவில்லை.

5) எனவே, நீதியின் நலன் கருதி இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பம் இடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

**சொத்து விபரம்**

அரியலூர் ரி.டி. ஆண்டிமடம் சப்.டி சொத்து இருப்பிடமான இடையக்குறிச்சி கிராமத்தில் சர்வே எண்.123/17 ல் கீழ்மேல் வடபுறம் 1.5 மீட்டர் தென்புறம் 1.4 மீட்டர், தென்வடலில் மேல்புறம் 28 மீட்டர், கீழ்புறம் 27 மீட்டர் அதிலுள்ள பாதை. இதற்கு நான்கெல்லை: வாதியின் வீட்டின் வாரபகுதி மற்றும் தோட்டத்திற்கு (மே) பிரதிவாதிகளின் வீட்டிற்கு (கி) வீதிக்கு (வ) காலி நத்தத்துக்கு (தெ).

ஒப்பம்/–திரு.S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

———————————————

கூடுதல்மாவட்டஉரிமையியல்
நீதிமன்றம், ஜெயங்கொண்டம்
அசல் வழக்கு எண்.98/2009
தீர்ப்பாணை
நாள்: 13.10.2023

———————————————